முருகப்பெருமான் துணை

**மகான் மூர்க்க நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

11.01.2022, செவ்வாய்கிழமை

1. மனமாயை உலகோர் வென்றிட
   மாதவசியாக வந்து அருளும்
   ஞானதேசிகனே ஆறுமுகனே
   ஞானியே உன்பெருமை கூறி
2. கூறியே பிலவ சிலை திங்கள்
   குறைவிலா இருபானேழ்திகதி குசன்வாரம்
   (பிலவ வருடம் மார்கழிமாதம் 27ம் நாள், 11.01.2022 செவ்வாய்கிழமை)
   அருளுவேன் துல்லிய ஆசி
   ஆற்றல்பட மூர்க்க நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உண்மை நெறி காட்டும் அரங்கன்
   ஞானமதை உலகமக்கள் ஏற்றிட
   ஞானவான்கள் ஆகும் வாய்ப்புக்கிட்டும்
4. கிட்டவே அரங்க ஞானியரின்
   குடிலை நோக்கி மக்கள்வர
   தட்டாது சர்வபலமும் கூடி
   தனிப்பெருங் கருணைமிக்கவர்களாகி
5. ஆகியே கலியுக மக்கள்
   அறத்தில் சிறந்தவர்களாகவும்
   அகிலம் வியக்க மாற்றம் தரும்
   ஆற்றல் மிக்கவர்களாகவும் மாறி
6. மாறியே கலியுக மக்கள்
   மகான் அரங்கன் தீட்சை பெற
   தேறியே உலகத் துன்பங்களை
   தெளிவுபட விரட்டும் சக்திமிக்கவர்களாக
7. ஆகவே ஆற்றல் பெருக
   அற்புதம் உலகில் புரிவர்
   வகைபட அரங்கன் சீடர்களாகி
   வல்லமைபட தொடரும் மக்களுக்கு
8. மக்களுக்கு மரணம் வெல்லும்
   மகா சக்தி பலம் உண்டாகும்
   தேக்கமிலா சேவை ஆற்றும்
   தெய்வ பலமும் பெருகிவரும்
9. வருகவே அன்னதான சேவையை
   வரும் மக்கள் தொடர்ந்து செய்து
   முருகா எனும் செபதபம் பட
   முழுமைபட வழிபாடு செய்துவர

10. வருகவே கருமவினை விலகும்
வருகின்ற கிரகங்கள் வழிஇடரும்
பெருமைதரும் வழிபாட்டால் விலகும்
பேருலகே அமைதி நன்மை அடைய

11. அடையவே அரங்கன் மார்க்கம்
ஆறுமுகனார் மார்க்கம் என
தடையற உணர்ந்து பின்பற்றிட
தரணியில் எல்லா மாற்றமும் காணும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–